**சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.**

**முன்னிலை – திரு.பி.எஸ். ரஸ்கின்ராஜ், பி.ஏ.,எல்.எல்.பி.,**

**சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.**

**2025ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02–ம் நாள் செவ்வாய்க்கிழமை**

**I.A.No.1/2025 in O.S.192 / 2023**

1. ஜெயவீரணன் – மனுதாரர்/ பிரதிவாதி

/ எதிர் /

செந்தில்விநாயகம் – எதிர்மனுதாரர்/ வாதி

இம்மனு என் முன்பு 13.11.2025–ம் தேதி இறுதியாக விசாரணைக்கு வந்து மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.J.பிரவின்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.குபேந்திரன் அவர்கள் முன்னிலையாகியும் இருதரப்பு ஆவணங்கள் மற்றும் வாதங்கள் பரிசீலிக்கப்பட்டு இதுவரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்.........

**உத்தரவு**

இம்மனுவானது மனுதாரர்கள் தரப்பில் Under Section 45 of the Indian Evidence Act and Order 26 Rule 9 and 151 CPC–ன் படி தாக்கல் செய்யயப்பட்ட மனுவாகும்.

**1. மனுவின் சுருக்கம்:–**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி ஆவார். எதிர்மனுதாரர் / வாதி ரூ.5,00,000/– கடன் பெற்றதாகவும், கடந்த 27.06.2021 அன்று கடனுறுதி சீட்டு எழுதிக் கொடுத்தாகவும், அதில் கண்ட தொகையை வட்டியுடன் சேர்த்து வசூல் செய்ய வேண்டி தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளார். உண்மையில், மனுதாரர் / பிரதிவாதியின் தகப்பனார் அல்லிக்கொடி எதிர்மனுதாரர் /வாதியின் தகப்பனார் கட்டளைக்கை முருகன் என்பவரிடமிருந்து கடந்த 2018 அன்று கடன் வாங்கியிருந்தார். வாதியின் தகப்பனார் அதிக வட்டி கேட்டதால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி கட்டளைக்கை முருகன் என்பவர் கடந்த 03.03.2022–ல் இறந்துவிட்டார். ஆகையால், எதிர்மனுதாரர் / வாதி மனுதாரரின் கையெழுத்தை போலியாக போட்டு கடனுறுதி சீட்டு உற்பத்தி செய்து வழக்கு தாக்கல் செய்துள்ளார். எனவே, மேற்படி சர்ச்சைக்குரிய கடனுறுதி சீட்டில் மனுதாரர் / பிரதிவாதியின் கையெழுத்து அடங்கிய ஆவணங்களை தடவியல் பரிசோதனைக்கு அனுப்ப ஒரு வழக்கறிஞரை நியமனம் செய்ய வேண்டும் என்பதாகும்.

**2. எதிருரையின் சுருக்கம்:-**

மனுவில் கூறியுள்ள சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவையாகும். கடந்த 27.06.2021 அன்று ரூ.5,00,000/- கடன் வாங்கிக் கொண்டு புரோநோட் மனுதாரர் எழுதிக் கொடுத்துள்ளார். தற்போது வழக்கு தாக்கல் செய்து 1 1/2 வருடங்கள் கழித்து சர்ச்சைக்குரிய புரோநோட்டை தடவியல் பரிசோதனைக்க அனுப்ப வேண்டும் என கூறுவது வழக்கு விசாரணையை காலம் கடத்துவதற்காகும். எனவே, மனுவை தள்ளுபடி செய்யக் கோரி எதிர்மனுதாரரால் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.** இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

***3.1.*** வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. எதிர்மனுதாரர் / வாதி கடந்த 24.04.2021 அன்று தாவா வழக்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் / பிரதிவாதி கடந்த 01.10.2023 அன்று எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார். பின்னர் எழுவினாக்கள் வனையப்பட்டு வழக்கு விசாரணைக்கு பட்டியிலிடப்பட்டு பிறகு மனுதாரர் / பிரதிவாதி இம்மனுவை தாக்கல் செய்திருக்கிறார். சர்ச்சைக்குரிய புரோநோட்டானது

கடந்த 20.05.2021 தேதியிட்டதாகும். மேற்படி தேதிக்கு ஆறு மாதங்களுக்கு முன்புள்ள மனுதாரர் / பிரதிவாதியின் கையெழுத்து அடங்கிய பதிவு செய்யப்பட்ட ஆவணங்களை தாக்கல் செய்தால் தான் சர்ச்சைக்குரிய கையெழுத்தை தடவியல் பரிசோதனைக்க அனுப்ப முடியும். தற்போது மனுதாரர்/ பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரை மற்றும் வக்காலத்தில் உள்ள கையெழுத்தை சர்ச்சைக்குரிய புரோநோட்டில் உள்ள கையெழுத்துடன் ஒப்பீடு செய்ய வேண்டும் என கூறுவது ஏற்புடையது அல்ல. கடந்த 20.05.2021–ம் தேதிக்கு பிறகு மனுதாரர் / பிரதிவாதியின் கையெழுத்தை எப்படி வேண்டுமானாலும் மாற்றிக்கொள்ளலாம். ஆக, உண்மை வெளிவரவேண்டுமென்றால் மனுதாரர் / பிரதிவாதி கடந்த 20.05.2021–ம் தேதிக்கு முன்புள்ள மனுதாரர் / பிரதிவாதியின் கையெழுத்து அடங்கிய ஆவணங்களை தாக்கல் செய்தால் தான் கையெழுத்தை ஒப்பீடு செய்ய தடவியல் பரிசோதனைக்கு அனுப்ப முடியும். மனுதாரர் / பிரதிவாதியின் நோக்கமானது வழக்கு விசாரணை காலம் கடத்துவதற்கான என தெரிய வருவதால் மனு அனுமதிக்கத்தக்கதல்ல என தீர்மானிக்கப்படுகிறது.

இறுதியாக, மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 02-ஆம் நாள் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.12.02 17:37:17 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-</u>**

--- இல்லை ---

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-</u>**

---- இல்லை ----

P S RUSKIN RAJ
Digitally signed by P S RUSKIN RAJ
Date: 2025.12.02 17:37:26 +0530

சார்பு நீதிபதி,

உசிலம்பட்டி.

சார்பு நீதிமன்றம், உசிலம்பட்டி.

I .A.No.1 / 2025 in

O.S.192 / 2023

நேரிய / வரைவு / உத்தரவு

02.12.2025